கேட்டுக்கொண்ட தொழிற்பேட்டை கண்டியங்கோவில் கிராமத்திலும், தெற்கு அவினாசிப்பாளையம் கிராமத்திலும், ஆக ஒட்டுமொத்தமாக 258.09 ஏக்கர் நிலத்தை அரசு கையகப்படுத்தி தொழிற்பேட்டையை அமைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது. பாசனம் இல்லாத புஞ்சை பகுதிகளிலே அந்த நிலத்தை எடுப்பதில் கொஞ்சம் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது. விரைவிலே அந்தத் தொழிற்பேட்டை அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.*

திரு. சி. கோவிந்தசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தொழிற்பேட்டை அமைவதற்கு ஏதாவது ஒரு குறிப்பிட்ட கால வரம்பு தீர்மானிக்கப்பட்டு அந்தப் பணிகள் நிறைவேற்றப்படுமா? ஏனென்றால், தேர்தலுக்கு முன்னால் குறைந்தபட்சம் அதற்கான தொடக்கப் பணிகள் நடந்தால் உதவியாக இருக்கும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கான கால வரம்பைத் தீர்மானித்து அந்தப் பணியைத் துவக்க முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவில் தொழிற்பேட்டை தொடங்க ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 8, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. பெரியசாமி, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

8—

நெல் கொள்முதல் நிலையம்

***91277—திரு. மு.க. பெரியசாமி:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2010 நவம்பர் 9]

(அ) பூம்புகார் தொகுதி, செம்பை ஒன்றியம், கிள்ளியூரில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பூம்புகார் தொகுதி, கிள்ளியூர் கிராமத்திற்குப் பக்கத்திலேயே கீழ்மாத்தூர் என்கிற பகுதி 2 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. அதைப்போன்று பக்கத்தில், 4 கிலோ மீட்டரிலே திருக்கடையூரிலே நேரடி கொள்முதல் நிலையம் இயங்குகிறது. எனவே, அருகிலேயே, 2 கிலோ மீட்டரில் ஒரு நேரடி கொள்முதல் நிலையமும், 4 கிலோ மீட்டர் தொலைவிலே இன்னொரு நேரடி கொள்முதல் நிலையமும் இயங்குகிற காரணத்தினால் கிள்ளியூரிலே கொள்முதல் நிலையம் அமைகிற நிலை இப்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. பெரியசாமி, இருக்கையில் இல்லை. மாற்றாக (குறுக்கீடு) திரு. அ. தமிழரசு, என்றால் முதலிலேயே என்னிடம் சொல்ல வேண்டும். என்ன இது? கேள்வி கேட்க வேண்டும் (குறுக்கீடு) யாராவது உறுப்பினர் இல்லையென்றால் என்னிடம் முதலிலே வந்து சொல்லிவிடுங்கள். திரு. அ. தமிழரசு.

திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் தொகுதி, செம்பை ஒன்றியம், கிள்ளியூர் பகுதியிலே நெல் கொள்முதல் நிலையம் அமைக்க இங்கு கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. இது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கீழ்மாத்தூரில் 2 கிலோ மீட்டர் தூரத்திலும், திருக்கடையூரில் 4 கிலோ மீட்டர் தூரத்திலும் நெல் கொள்முதல் நிலையம் அமைக்கப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். அப்படி கிள்ளியூர் பகுதியிலிருந்து அந்தப் பகுதிகளுக்கு விவசாயிகள் நெல்லைக் கொண்டு செல்லும்போது அங்குள்ள அதிகாரிகள் அதை உடன் எடுக்க மறுப்பதோடு, ஈரப்பதம் உள்ளது எனக் காரணம் காட்டி விலையைக் குறைக்கிறார்கள். விவசாயிகளுக்கு உடனடியாகப் பணம் பட்டுவாடா செய்யப்படுவதில் காலதாமதம் ஏற்படுகிறது. இந்தப் பிரச்சினை நாகை, திருவாரூர், தஞ்சை போன்ற மாவட்டங்களிலும் பரவலாக இருப்பதாகத் தகவல் உள்ளது.

எனவே, மேற்படி பூம்புகார் தொகுதி, செம்பை ஒன்றியம், கிள்ளியூரில் அரசின் நிலையான கட்டடத்தில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் முன்வருவாரா என்று தங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கொள்முதல் நிலையங்களை பெரும்பான்மையாக அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களே துவக்குவதற்கு அனுமதி வழங்க வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. பொதுவாக, அந்தப் பகுதியிலே நேரடிக் கொள்முதல் நிலையத்திலே பணியாற்றுகின்ற பட்டியலர்கள், பாதுகாவலர்கள் போன்ற பணியிலே இருப்பவர்களுக்கு சம்பளம் அரசாங்கத்தின் சார்பாகத் தருகிறோம். ஓரளவிற்கு அந்தப் பகுதியிலே விவசாயிகள் எதிர்பார்க்கிற அளவிற்கு உற்பத்தியும் இருந்து, அதுபோன்ற இடங்கள் அடையாளம் காணப்படும் என்று சொன்னால் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அனுமதி கொடுக்கிறார்கள். அதனால்தான் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அந்தப் பகுதியிலே 2 கிலோ மீட்டர், 4 கிலோ மீட்டர் தூரத்திலே கொள்முதல் நிலையங்கள் இருக்கிற காரணத்தினால் போதுமென்று கருதியிருக்கிறார்கள். எனவே, அந்தப் பகுதியைச் சார்ந்த விவசாயிகள், அதிகமான நெல் உற்பத்தி அந்தப் பகுதியில் இருக்கிறது, போக்குவரத்து வசதி இல்லாமல் இருக்கிறது என்று மாவட்ட ஆட்சித் தலைவருடைய பரிந்துரையோடு அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால், மீண்டும் பரிசீலித்து அங்கு நேரடிக் கொள்முதல் நிலையம் துவக்குவதற்கு அரசு பரிசீலனை செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல் கொள்முதல் நிலையங்கள் காவிரி டெல்டா பகுதியிலே தொடர்ந்து செயல்பட்டு வருகின்றன என்றாலும், ஆண்டுதோறும் குறுவை நெல் கொள்முதல் செய்யப்படுகிறபொழுது 'ஈரப்பதம்' என்று காரணம் காட்டி

2010 நவம்பர் 9]

கொள்முதலிலே பிரச்சினை ஏற்பட்டுக் கொண்டேயிருக்கிறது. அந்த ஈரப்பதத்தினுடைய அளவை அதிகரிக்கச் செய்வதற்கு தமிழ்நாடு அரசு மத்திய அரசினிடத்திலே அனுமதி கோர வேண்டியிருக்கிறது. மத்திய அரசினிடத்திலே ஆண்டுதோறும் அனுமதி கோரி அதைப் பெற்று அந்த ஈரப்பதத்தை உயர்த்துவற்கான கால அவகாசம் கடந்துவிடுகிற காரணத்தினாலே முன்கூட்டியே அறுவடை செய்கிற விவசாயிகளுக்குப் போதுமான விலை கிடைக்காமல் போய்விடுகிற சூழ்நிலை தொடர்ந்து நிலவுகிறது. ஆகவே, மத்திய அரசாங்கத்திடம் ஆண்டுதோறும் கேட்கிற இந்த நிலையை மாற்றுவதற்கு நம்முடைய மாநில அரசு முயற்சி எடுத்து ஈரப்பதத்தினுடைய அளவை உயர்த்தி விவசாயிகளுக்குப் பாதிப்பு ஏற்படாமல் செய்வதற்குரிய முயற்சியை இந்த அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஈரப்பதம் என்பது தற்காலிகமானதுதான். ஏனென்று சொன்னால், மழை வருகிறபோதுதான் ஈரப்பதம் என்பது நெல்லிலே கூடுகிறது. நிரந்தரமாக தினமும் மழை பெய்வதில்லை. ஆண்டுக்கு ஒருமுறை அல்லது குறுவை சாகுபடி போன்ற நேரங்களில்கூட மழை பெய்கிறபோது உரிய நேரத்திலே நாங்கள் அரசின் சார்பாக மத்திய அரசாங்கத்திற்கு கடிதங்கள் எழுதி உடனுக்குடன் ஆணைகள் பெற்றுத் தருகிறோம். சென்ற ஆண்டுகூட மத்திய அரசாங்கத்திற்குக் கடிதம் எழுதி, அனுமதிப்பார்கள் என்று அந்த நோக்கத்தோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட தற்காலிகமாக இதை வாங்குங்கள் என்று சொல்லி மீண்டும் மைய அரசிடம் நாங்கள் அனுமதி பெற்று தொடர்ந்து வாங்கச் சொன்னோம். எனவே, விவசாயிகளைப் பொறுத்த அளவுக்கு உரிய விலைகளை அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். அந்தப் பகுதியில் உற்பத்தி செய்யப்படுகின்ற நெல்லை வாங்க வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தினுடைய நோக்கம்; அது தொடர்ந்து நடைபெறுகிறது.

மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினருக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது ஆண்டுக்காண்டு இப்படிச் செய்வதால் விவசாயிகளுடைய நெல் உற்பத்தி நேரடிக் கொள்முதல் நிலையத்திற்கு வராமல் போய்விடுகிறது என்பது

தவறான கருத்து. தொடர்ந்து பார்க்கிறபோது, ஆண்டுக்காண்டு நம்முடைய கொள்முதல் அளவு கூடியிருக்கிறது. 2006–ல் நாங்கள் ஆட்சிக்கு வருகிறபோது 13,81,570 டன்கள்தான் என்று சொன்னால், சென்ற ஆண்டு 18,52,784 டன்கள். நான்கு ஆண்டுகளிலே நம்முடைய கொள்முதல் கூடியிருக்கிறது. ஆனாலும், ஈரப்பதத்தைப் பொறுத்த அளவிற்கு நிரந்தரமாக அனுமதி பெறலாம் என்ற ஒரு நல்ல கருத்தைச் சொல்லியிருக்கிறீர்கள். ஆண்டுக்காண்டு அங்குதான் அனுமதி பெறுகிறோம். மாண்புமிகு முதலமைச்சரிடம் கலந்து பேசி இதற்கு ஒரு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு இந்தத் துறை முயற்சிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 9, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை சந்திரசேகரன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

9—

திருப்பணி

***117022—திரு. துரை சந்திரசேகரன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) திருவையாறு வட்டம், கடுவெளி கிராமம், அருள்மிகு ஆகாயபுரீஸ்வரர் ஆலய திருப்பணி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், கடுவெளி அருள்மிகு ஆகாயபுரீஸ்வரர் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் நிலை–3 செயல் அலுவலரால் தக்கார் நிலையில் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலின் ஆண்டு வருமானம் ரூ.3,400/–. இத்திருக்கோயில் மூன்றாம் இராஜராஜ சோழனால் கட்டப்பட்டதாகும். கடந்த 50 ஆண்டுகளுக்கு முன்னர் குடமுழுக்கு